## பிரிவு II – கடவுளை பற்றிய கதைகள்

## நம்மை உற்சாகபடுத்தும், கடவுளின் அன்பை வெளிப்படுத்தும் சான்றுரைகள்

### இமெல்டாவின் கதை (Imalda's story )- குழந்தைத்தனமான பிராத்தினை

இமெல்டாவிற்கு வேலை இல்லை. அவசியமாக ஒரு வேலை தேவை பட்டது. உடணடியாக வேலையில் சேர்ந்து, பணம் சம்பாரித்து குடும்பத்தை கவனிக்க வேண்டும். ஒரு இரவு, அவள் வீட்டை விட்டு வெளியே வந்து நக்ஷத்திர ஒளி உள்ள வானத்தை பார்த்து' அப்பா எனக்கு ஒரு வேலை வேண்டும், எனக்கு உதவும் என்று ஜெபித்தாள்.

அவள் இன்னும் எந்த நிறுவனங்களுக்கும் வேலைக்காக மனு அனுப்பவில்லை. ஆனாலும் அவளுக்கு இரண்டு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்ட்து. அவள் நண்பர்களின் வட்டாரத்தின் மூலமாய் கிடைத்தது. நம் அன்புத் தகப்பன் ஜெபத்தை கேட்டு பதில் அளித்ததற்காக தேவனை போற்றி நன்றி தெரிவித்தாள்.

உண்மையில், நம் அன்பான பரலோக தகப்பன் நம் இதயங்களையும் மனதையும் அறிந்திருக்கிறார். நாம் எப்போதும் சிறிய குழந்தைகள் போல அவரை அணுக முடியும். அவர் நம் குழந்தைத்தனமான ஜெபங்களையும் கேட்கிறார்.

**மத்தேயு 18: 2-4**

***இயேசு ஒரு சிறு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து: அதை அவர்கள் நடுவே நிறுத்தி:***

***நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***ஆகையால் இந்தப்பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான்.***

### பிரிடியின் கதை (Prity's story ) - கேளுங்கள் அப்பொழுது பெற்று கொள்வீர்கள்

நான் என் உறவினருடன் ஒரு கூட்டமான பேருந்தில் (பஸ்ஸில்) ஏறினேன். உட்கார இடம் இல்லை. திடீரென, என் காலில் ஒரு தசை பிடிப்பு ஏற்பட்டது. நான் வலி மிகுதியால் உட்காரவேண்டும் என்று விரும்பினேன். ஆனால் எந்த இருக்கையும் காலியாக இல்லை. நான் இயேசுவிடம் எனக்கு உதவ ஜெபித்தேன். நான் என் பிரார்த்தனையை முடிக்கும் முன்பே, ஒரு பெண் தனது

இருக்கையை விட்டு எழுந்து கீழே இறங்க கதவை நோக்கி செல்வதை பார்த்தேன். நான் அந்த இருக்கையினல் உட்கார்ந்து இயேசுவுக்கு நன்றி தெரிவித்தேன்.

இது ஒரு கதை. இதை போல நான் பல கதைகள் பகிர்ந்து கொள்ள முடியும். நான் ஒவ்வொரு முறையும் இயேசுவிடம் பிரார்த்திக்கும் போது , அவர் பதிலளிக்கிறார். நான் தேவனாகிய கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

**<u>மத்தேயு 7: 7-11</u>**

***கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.***

***ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.***

***உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?***

***மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானா?***

***ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?***

**<u>பூர்ணிமாவின் கதை (Purnima’s story) - கடவுளால் சாத்தியமற்றது ஒன்றுமில்லை</u>**

என்னில் பல சுகவீனங்கள் இருந்தன. நான் பல வியாதிகளுக்கு மருந்துகள் எடுக்க வேண்டியிருந்தது. நான் என் உடல்நிலை குறித்து எப்போதும் பதற்றமடைந்தவளாய் இருப்பேன். நான் என் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்புவித்து, மனதுருகி ஒழுங்காக ஜெபம் செய்ய ஆரம்பித்தேன். இயேசு வியாதி பிரச்சனைகளிலிருந்து என்னை குணமாக்கியதால் நான் பல மருந்துகளை சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். இப்போது இரத்த அழுத்தம் ஒன்றுக்கு மாத்திரம் ஒரு மருந்து எடுத்து கொள்கிறேன் அவ்வளவுதான். என் வாழ்க்கையில் ஏற்ப்பட்ட அவருடைய அற்புதங்களுக்காக, நான், இயேசுவை துதித்து நன்றி பாராட்டுகிறேன்.

இதற்குமுன் நான் மாலை வேளைகளில் மிக பதட்டமாக தவிப்போடு இருப்பேன். நான் மாலை வேளைகளிலும் மற்றும் இரவிலும் தனியாக இருப்பது என்பது கற்பனை கூட செய்ய முடியாது. இருட்டு என்றால் மிகவும் பயப்படுவேன். தேவன் தன் பலத்தல் என்னை ஆசீர்வதித்தார். எனக்கு இப்போது இரவு நேரங்களில் தனியாக இருக்க முடிகிறது. மின் வெட்டு ஏற்ப்பட்டால் அச்சமயங்களில், மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அமைதியாக இருக்க முடிகிறது.

என் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும்,(விஷயத்திலும்) கடவுள் என்னை அதிகமாக ஆசீர்வதித்திருக்கிறார். அவர் என் வேலை ஸ்தலத்தில், புகழையும்

வெற்றியையும் எனக்குக் கொடுத்திருக்கிறார். அனைத்து மகிமையையும், கனமும் அவருக்கே உரியது.

ஒவ்வொரு நாள் காலையிலும், நான் இயேசுவிடம் முற்றிலும் ஒப்புக் கொடுத்து, ஜெபத்துடன் என் நாளை தொடங்குகிறேன். ஒவ்வொரு இரவும் நான் படுக்கைக்கு செல்லும் முன் அவரது ஆசீர்வாதங்களுக்கு நன்றி செய்கிறேன். நாள் போதும் ஓய்வு நேரம் கிடைக்கும் போதெல்லாம் நான் அவரை நினைவு கூர்ந்து என் மேலும் எனக்கு அன்பானவர்கள் மேலும் பொழிந்த அவரது ஆசீர்வாதங்களுக்காகவும், அவரது கிருபைக்காகவும் நன்றி செலுத்தி போற்றுவேன்.

**<u>எரேமியா 32:27</u>**

***"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக் கூடாத அதிசயமானகாரியம் ஒன்றுண்டோ?"***

**<u>பிலிப்பியர் 4: 13</u>**

***"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு".***

**<u>அல்போன்சாவின் கதை</u> – (Alphonsa's story)**

### தேவன் நம் தேவைகளை பூர்த்தி செய்கிறவர். நமக்கு எதுவும் தேவைபடுவதில்லை.

எனக்கு பிரான்சில் ஒரு வருடம் வேலை செய்ய வாய்ப்பு அளிக்கபட்டது. நான் ஜெபித்து அந்த வேலைக்கு ஒப்பு கொண்டேன். ஒருவருக்கு பிரஞ்சு மொழி பேச தெரியாவிட்டால் தினமும் ஒரு சவாலாகவே இருக்கும், அங்கு உள்ள மக்களுக்கு ஆங்கிலம் புரியாததாலே அங்கு தங்குவது மிக கடினம் என்று கூடே இருப்பவர்கள் எச்சரித்தார்கள். வேலை ஸ்தலத்தில் வாடிக்கையாளர் நட்போடு பழக மாட்டார்கள் என்று என்னிடம் கூறினார்கள். மற்றும் அங்கு மிகவும் மாறுபட்ட கலாச்சாரம், பிரான்சின் அந்த நகரில் பல இந்தியர்கள் இல்லை, எனவே வாழ்க்கை கடினமாக இருக்கும், உள்ளம் சோர்வடைந்துவிடும் என்று கூறினார்கள்.

நான் அவர்களுடைய கருத்துக்களை இயேசுவினிடத்தில் ஏறெடுத்தேன். ஆண்டவர் நான் செல்லும் இடத்திற்கும், அங்கே சந்திக்கபோகும் மக்களுக்காகவும பிராத்தனை செய்ய என் இதயத்தில் ஆர்வத்தை கொடுத்தார். என் வேலைக்கு தேவையான பத்திரங்கள் தயாராகும் அடுத்த சில மாதங்களில் என் வருங்கால வேலை ஸ்தலத்துகாகவும், உடன் பணியாளருக்காகவும் வேண்டினேன்.

எங்கள் ஆண்டவர் வாக்கு மாறாதவர். அவர் என் சிறிய தேவைகளை கூட கவனித்து கொண்டார். (பிரான்சில்) மார்ஸைல் செல்லும் விமானத்தில், மிகவும் சரளமாக ஆங்கிலத்தில் பேச தெரிந்த ஒரு பிரஞ்சு பெண்ணை நான்

சந்தித்தேன். அவள் எனக்கு கொடுத்த குறிப்புகள், மற்றும் ஆலோசனையும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நான் விமான நிலையத்திற்கு வெளியே வந்து வாடகை வண்டியில்(டாக்சியில்) ஏறினேன். வாடகை வண்டி ஓட்டுநருக்கும் (டாக்சி டிரைவருக்கும்) ஆங்கிலம் பேச முடியும் என்றறிந்து ஆச்சரியமும் இன்பமும் அடைந்தேன். விடுதி அடைய இது மிகவும் எளிதாக இருந்தது.

பல்வேறு வழிகளில் மற்றும் பல சூழ்நிலைகளில், தேவன் எனக்கு வழி காட்டினார். நான் பிரான்சில் தங்கிய நாட்களில் நல்ல நண்பர்களால் என்னை ஆசீர்வதித்தார்.

நான் வேலை செய்யும் இடத்திலோ அல்லது என்னுடைய வாடிக்கையாளர்களிடமோ எந்த சவால்களையும் எதிர்கொள்ளவில்லை. உண்மையில், எனக்கு வாடிக்கையாளர் இடத்தில் சில நல்ல நண்பர்கள் கிடைத்தனர். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஆங்கிலத்தில் ஆராதனை நடத்தும் தேவாலயத்தை கண்டுபிடித்தேன். நான் தங்க எனக்கேற்ற ஒரு சிறிய வீடு சரியான இடத்தில் கிடைத்தது.

இதற்கு மாறாக பிரான்சில் வேலை சவாலான இல்லாமல், நான் தங்கிய நாட்கள் கடவுள் அருளால் ஆசீர்வதிக்கப்பட்டு இருந்ததை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நான் பிரான்சில் இருந்த அற்புதமான நாட்களுக்காக ஏங்குகிறேன். மீண்டும் அங்கு செல்வேன் என்று நம்புகிறேன். அங்கு எனக்கு அற்புதமான நண்பர்கள் உண்டு. என் கூடுதல் சன்மானம் (போனஸ்) என்னவென்றால் ஆண்டவர் பல மக்களுக்கு அவரது அன்பை பகிர்ந்துக் கொள்ள அவரது கருவியாக என்னை பயன்படுத்தினார். நான் இயேசுவை துதிக்கிறேன்

<u>பிலிப்பியர் 4: 19-20</u>

***"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.***

***நம்முடைய பிதாவாகிய தேவனானவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்."***

## <u>ஹீராவதியின் (Herawati) கதை - கர்த்தராகிய இயேசு நம்மை குணப்படுத்துகிறவர்.</u>

நானும் எனது கணவரும் காலைதோரும் நடைபயிற்சி செய்வதுண்டு. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் அவ்வாறு நாங்கள் நடக்கும் போது நான் மிக பலவீனமாக இருப்பதை உணர்ந்தேன். என்னால் நடக்க முடியவில்லை. என் கணவர் என்னை மெதுவாக வீட்டிற்கு திரும்ப வர உதவினார். நான் படுக்கையில் படுத்துக் கொண்டேன். நான் இதை போல் எப்போதும் உணர்ந்தது இல்லை. எனக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. நான் படுக்கையில் படுத்துக் கொண்டே இயேசுவை நினைத்தேன். திடீரென்று என் மகள் தேவாலயத்தில் இருக்க வேண்டும் என்று உணர்ந்தேன். இயேசுவிடம் "ஹலோ" என்று சொல்லி நான் பலவீனமாக இருக்கிறேன் என்று என் சார்பாக

எடுத்து சொல் என்று கைதொலைபேசியின் மூலமாக செய்தி அனுப்பினேன். என் மகள் உடனே என்னை அழைத்தாள்.

நாங்கள் இருவரும் எனக்கு குணமளிக்க இயேசுவிடம் ஜெபித்தோம்.இயேசு நம்முடைய பாவங்களையும், நோய்களையும் சிலுவையில் நமக்காக மரித்து, அகற்றினார். இயேசுவின் தழும்புகளாலே குணமாகிறோம் என்ற வாக்குறுதியை நினைவு கூர்ந்து நாங்கள் இயேசுவிடம் ஜெபித்தோம். நான் குணமாகிவிட்டது போல என் மனதில் கற்பனை செய்து கொண்டேன். ஒரு சில நிமிடங்களுக்கு பிறகு நான் பெலனடைந்து இயல்பானதை உணர்ந்தேன்.

**<u>சங்கீதம் 103: 1-5</u>**

***"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.***

***என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.***

***அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,***

***உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,***

***நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது."***

**<u>ஏசாயா 53: 5</u>**

***"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்."***

**<u>அமெலியாவின் குணமடைந்த கதை (Amelia's story)–</u>**

## <u>விடாமுயற்சியான பிரார்த்தனை</u>

அமெலியா சிறு குழந்தையாய் இருந்த போது அடிக்கடி காது நோய் ஏற்ப்பட்டது.

இதன் விளைவாக, மூன்று வரிசை (செட்) காது குழாய்கள் காது சிகிச்சை சிறப்பு மருத்துவரால் பொருத்தப்பட்டது. கடைசி வரிசை (செட்) குழாய்களில் ஒன்று ஒரு செவிப்பறையில் துளை ஏற்ப்படுத்தி விட்டது. காது சிறப்பு மருத்துவர் அறுவை சிகிச்சையால் மூடலாம் என்று பரிந்து உரைத்தார், ஆனாலும் அமெலியாவின் பெற்றோர்கள் காது குணமடைய வேண்டும் என்று விசுவாசத்துடன் தேவனை வேண்டிக் கொண்டனர்.

காது நோய் நின்ற சில ஆண்டுகளுக்கு பிறகு அமெலியா அந்த காதில் ஒரு வேடிக்கையான சத்தத்தை கவனித்தாள். அமெலியாவின் பெற்றோர்கள் தேவனிடம் ஜெபித்தனர். கடவுள் காதுகளை குணம் ஆக்குகிறார் என்று தெரிவித்தார்.

குழந்தை மருத்தவரோடு அடுத்த சந்திப்பின் போது அமெலியா பெற்றோர்கள் காது குணமடைந்ததாக அறிவிப்பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஆச்சரியம்! துளையில் எந்த மாற்றமும் இல்லை என்று மருத்துவர் குறிப்பிட்டார்.

என்னதான் நடக்கிறது? வருடாந்திர மருத்துவ சோதனையின் போது, குழந்தை மருத்தவர், தொடர்ந்து துளை மூடவில்லை என்று கூறிய போதிலும் அமெலியாவின் பெற்றோர் காதை குணபடுத்தினார் என்று அறிக்கையிட்டு தேவனிடம் விடாது ஜெபம் செய்தனர்.

நான்கு ஆண்டுகள் கழித்து, அவர்கள் காது சிறப்பு மருத்துவரை வேறு ஒரு காரியத்துக்காக சந்திக்கவேண்டி இருந்தது. அவர் அமெலியாவின் காதை சோதித்ததில் துளை குணவிட்டதாக அறிவித்தார்!

நாம் பெரும்பாலும் கடவுளின் வாக்குறுதிகள் உடனடியாக வெளிப்படுவதை பார்க்கிறோம். எனினும், சில சமயங்களில் தேவன் நம்மிடம் விடாமுயற்சியான ஜெபத்தை எதிர்பார்கிறார்.

நம் தேவன் உண்மையானவர், வாக்குறுதிகளை காப்பாற்றுகிறவர் என்று விசுவாசித்து கடவுளுடைய வாக்குறுதிகளை பற்றி கொள்ள வேண்டியது நமது கடமை.

**1 தெசலோனிக்கேயர் 5: 16-18**

*"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.*

*இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.*

*எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது."*

**சங்கீதம் 30: 2**

*"என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், என்னை நீர் குணமாக்கினீர்."*

**லூக்கா 17: 19**

*"அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்."*

## சரஸ்வதியின் கதை

**நம்முடைய தேவைகளை நமக்கு தெரியாவிட்டாலும் நம் தேவன் அறிந்திருக்கிறார்.**

**சங்கீதம் 42: 1**

***“மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது.”***

கர்த்தராகிய இயேசு ஒரு பெரும் நோயிலிருந்து என்னை குணமாக்கிய போது எனக்கு அவரோடு தனிப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. அதுமுதல் தேவனின் அன்பு மற்றும் அவரது வழிகளை பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆவிக்குறிய தாகம்மும் பசியும் கொண்டு இருந்தேன். தேவனை பற்றியும், ஆவிகுரிய விஷயங்களை மேலும் கற்பிக்க எனக்கு ஒரு வழிகாட்டி தேவை என்ற வாஞ்சை ஆழமாக என் இதயத்தில் இருந்தது. தேவனை நோக்கி ஜெபித்தேன். சில மூத்தவர்கள் வழிக்காட்டுவார்கள் என்று நோக்கி பார்த்த போது பெரும்பாலும் அனைவரும் அவரவர் வேலையில் மும்முரமாக இருந்தனர். எல்லா நேரங்களிலும் என்னோடு பேச, விவாதிக்க, ஒன்றாக வழிபட்டு தேவனுடைய நாமத்தை மகிமை படுத்த, ஒரு அலோசகருக்காக வேண்டிக்கொண்டு இருந்தேன். இதற்கிடையில், நான் வேதாகமத்தை படிப்பதிலேயும், பிராத்தனையிலும் ,தேவனுடைய பிரசன்னத்தில் நேரத்தை செலவளிக்கவும் ஆரம்பித்தேன். தேவன் என்னை பல வழிகளில் ஆசீர்வதிக்க தொடங்கினார். கால போக்கில் அலோசகருக்காக வேண்டிக் கொள்வதை நிறுத்திவிட்டேன். என் கவனத்திற்கு மற்ற காரியங்கள், முற்பட்டதால் நான் மற்ற நோக்கங்களுக்காக வேண்டிக்கொள்ள தொடங்கினேன்.

இரண்டு ஆண்டுகள் சென்றன. நான் ஒரு கிறிஸ்தவ தலைவர்கள் மாநாட்டி கலந்து கொண்டேன். அப்போது, ஒரு ஆசிரிய உறுப்பினரை சந்தித்தேன். அவரோடு பேசுமாறு பரிசுத்த ஆவியானவரின் வலுவான அபிஷேகத்தால் தூண்டப்பட்டேன்.

என்னால் புரிந்து கொள்ள முடியாத, அவர் மேல் வலிமையான ஈடுபாடு எனக்குள் இருப்பதை உணர்ந்தேன்.பரிசுத்த ஆவியானவர் அவரிடம் சென்று பேசும்படி தூண்டினார். ஆனால் நான் அவ்வாறு செய்யாமல் அமைதியாக இருந்தேன்.

அவரது வகுப்புகள் தொடங்கியது. அவர் கற்றுக்கொடுத்த எல்லாவற்றையும் நான் கூர்ந்து கவனித்தேன். அவர் எப்படி ஆண்டவருக்காக காத்திருக்க வேண்டும், எப்படி அவருக்கு நெருக்கமாக வரமுடியும், அவருடைய சித்தத்தை எவ்வாறு தேடவேண்டும் என்று கற்றுக்கொடுத்தார்.

ஒரு சில நாட்களில் அவரது வகுப்புகள் முடிந்தவுடன், அந்த இடத்தை விட்டு கிளம்பினார். அவரிடம் உடனடியாக பேச பரிசுத்த ஆவியானவர் ஊக்கமளித்தும் நான் தயங்கினேன். வாகனம் வரை உடன் சென்றேன். அவரும் சென்றுவிட்டார்.

இந்த உணர்வு ஒரு சில நாட்களுக்கு பிறகு போய்விடும் என்று நினைத்தேன். ஆனால் போகவில்லை.

நான் தேவனிடம் ஜெபம் செய்தேன். இரண்டு நாட்களுக்கு பிறகு அவருக்கு ஒரு மின்னஞ்சல் (e-mail) அனுப்பினேன். அவரும் பதிலளித்தார். அவரால் என் ஆசானாக(ஆலோசகர்) இருக்க முடியுமா, ஆசானாக இருக்கும்படி எப்படி கேட்பது, என்னை தெரிந்திருக்க வாய்பில்லையே, அவருக்கு எனக்கென்று நேரம் இருக்குமா? அவர் ஏன் நேரத்தை என்மேல் முதலீடு செய்ய வேண்டும்?

என்றெல்லாம் யோசித்தேன். இறுதியில் நான் ஜெபித்து, என் வழிகாட்டியாக (ஆலோசகர்)இருக்க வேண்டும் என்று அவரை கேட்டேன். அவரும் ஒப்பு கொண்டார்.

நான் தேவனை துதிக்கிறேன்! அவர் உண்மையிலேயே அன்பான கடவுள்! அவர் என் பிராத்தனைக்கு பதில் அளித்தார். காலப்போக்கில் நான் என் பிராத்தனையை மறந்துபோனாலும் இறைவன் என் பிராத்தனை கோரிக்கையை நினைவு கூர்ந்து என் பிராத்தனைக்கு பதில் அளித்தார். அவர் உண்மையுள்ளவர்!

நான் ஒரு வழிகாட்டியை விரும்பினேன், ஆனால் அதற்கு பதிலாக தேவன் கூடுதல் சன்மானம் (போனஸ்) எனக்குக் கொடுத்திருக்கிறார். எனக்கு வழிகாட்டியாக, ஒரு பயிற்சியாளராக மற்றும் எல்லா வழிகளிலும் என்னை கவனிக்க ஒரு அன்பான மூத்த சகோதரியை (எனக்கு ஒரு மூத்த சகோதரர் மட்டும் உண்டு எந்த சகோதரியும் இல்லை). எனக்கு கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார்.

என் ஆலோசகர், என் பின்னணியையும், வேலையையும் அறிந்து, என்னை புரிந்து கொண்டு, என் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தேவனின் கருணை மற்றும் அவரது ஆசீர்வாதத்தில் என்னை வழிநடத்த கூடிய சாத்தியமான நபர் என்று ஆண்டவர் உறுதி செய்து இருக்கிறார். எனக்கு இது போன்ற ஒரு அற்புதமான அன்பான மூத்த சகோதரியை ஆசீர்வாதமாக கொடுத்த கடவுளுக்கு நன்றி.

கடவுள் அற்புதமான வழிகளில் செயல்படுகிறார். நான் என் ஆலோசகரிடம் (மூத்த சகோதரி) சில விஷயங்களை விவாதிக்கும் போது புதிய விஷயங்களை கற்று கொள்கிறேன்.

அடுத்த சில நாட்களில், நான் கற்று கொண்டவைகள் மற்றவர்களுக்கு பயன்படும்படி தேவன் அவர்களை என்னிடம் அனுப்புவார். கடவுள் அவரது கருவியாக என்னை உபயோகித்து என் மூலம் மற்றவர்களுக்கு உதவ தொடங்கியிருக்கிறார்.

ஆண்டவரே, உமக்கு நன்றி. உம்முடைய அன்பும் உண்மையும் மகத்தானது. நான் எங்கள் நம்பிக்கையின் ஆண்டவருடனும், என் மூத்த சகோதரியுடனும் (என் தீதி) என்னுடைய விசுவாச பாதையை அனுபவித்து கொண்டிருக்கிறேன்.

**<u>மத்தேயு 7: 7-11</u>**

***"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.***

***ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.***

***உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?***

***மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானா?***

*ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"*

**நீதிமொழிகள் 3: 5-6**

*"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து*

*உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."*

**<u>பராமிதாவின் கதை Paramita's story</u>**

**<u>எங்கள் தேவன் எங்கள் பாதுகாவலன் (சக்தி வாய்ந்த சங்கீதம் 91)</u>**

நான் ஒரு அலுவலக கூட்டத்தில் கலந்து கொண்டு இருந்த போது, என் மடிக்கணினி (லாப்டாப்)அரட்டை சாளரத்தில் (சாட் வின்டோ) என் அம்மாவுக்கு விபத்து ஏற்ப்பட்டு அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார் என்றும், உடனே தொலைபேசியில் அழைக்குமாறு என் சகோதரி ஒரு அவசர செய்தியை அனுப்பினார். நான் கூட்டம் நடந்துக் கொண்டிருந்த அறையிலிருந்து வெளியே வந்து பால்கனிக்கு சென்று அவளை அழைத்தேன். ஒரு தேங்காய் என் அம்மாவின் தலையில் விழுந்ததினால் அவரை அழைதுக் கொண்டு மருத்துவமனைக்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்று, என் மாமா என் சகோதரியை அழைத்து கூறியிருந்தார். எங்கள் அம்மா நாட்டின் மற்றொரு பகுதியில், எங்கள் சொந்த ஊரில் இருந்தார்கள். நானும், என் சகோதரி, சகோதரனும் , அங்கிருந்து மிக தொலைவில் இருக்கும் பெங்களூரில் இருந்தொம். ஒரு சில நிமிடங்கள், நான் பதட்டப்பட்டேன். நான் என் மாமாவை அழைக்க முயற்சித்தேன் ஆனால் முடியவில்லை. நான் என் அத்தையை அழைத்து அவரிடம் பேசினேன். அவரால் எனக்கு எந்த கூடுதல் தகவல்களையும் கொடுக்க முடியவில்லை. அவர் எங்கள் வீட்டிற்கு செல்ல தயாராகி கொண்டிருந்தார்கள். அவர் அங்கே போய் சேர்ந்தவுடன் என்னை அழைப்பதாய் கூறினார்கள்.

நான் அமைதியற்று இருந்தேன். "யார் எனக்கு சமீபத்திய(லேடஸ்ட்) தகலவல்களை சொல்ல முடியும்? என் அம்மா எங்கே, அவள் இந்த நொடியில் எப்படி இருக்கிறார்?" இன்னொரு முறை என்னுடைய மாமாவை அழைக்க முயற்சித்தேன்.

அந்த நொடியில் என் மனதை கட்டுப்படுத்தினேன். நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? நான் ஏன் எல்லா பதில்களையும் வாக்குறுதிகளையும் வைத்திருப்பவரை அணுகவில்லை?, நான் இயேசுவிடம் ஜெபித்தேன்.

ஒவ்வொரு காலையிலும் எழுந்தவுடன் மற்றும் இரவில் நான் படுக்கைக்கு செல்லும் முன் சங்கீதம் 91யை கோரிக்கையாக ஜெபிப்பேன். என்னையும் எனக்கு நெருங்கியவர்களையும் பாதுகாக்கும்படி, தேவன் தந்த வாக்குறுதிகளை நினைவுகூறுவேன். அன்று அலுவலக பால்கனியில் நின்று, நான் சங்கீதம் 91யை பிராத்தனை செய்து, என் அம்மாக்கு அவரது

வாக்குறுதிகளை கோரிக்கை செய்தேன். நான் ஆண்டவரிடம் என் அம்மாவை ஒப்புகொடுத்து , நான் அவரது வாக்குறுதிகளை விசுவாசிக்கிறேன் என்று சொன்னேன். எனக்குள் ஒரு அமைதியான(சாந்தம்) உணர்வு ஏற்ப்பட்டது. இது கிறிஸ்துவின் சமாதானம். எனக்கு அந்த சாந்தம் ஆச்சரியமாக இருந்தது. என் அம்மா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார் எப்படி எனக்குள் இந்த சமாதானம் இருக்க முடியும்?

இதில் என்ன ஆச்சரியம் ? கிறிஸ்துவின் சமாதானம் எல்லா புத்திக்கும் மேலானது

நான் என் சகோதரியை அழைத்து நமது அம்மா பாதுகாப்பாக இருப்பார் என்று அவளுக்கு நம்பிக்கை அளித்தேன். இயேசுவின் பொறுப்பில் இருக்கிறார் என்று கூறினேன். பின்பு நான் மீண்டும் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

பிறகு கூட்டம் முடிந்தவுடன் , என் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்தது சென்ற என் மாமாவிடம் பேசினேன். நான் அவரிடம் பேசிய பிறகு என் அம்மாவிடமும் பேசினேன். ஒரு அவருடைய பேச்சில் சிறிய நடுங்கம் இருந்தாலும் தான் நன்றாக இருப்பதாக நம்பிகையோடு பேசினார். மருத்துவர் ஆலோசனையின்படி எடுத்த ஸ்கேன் முடிவு மாலையில் எதிர்பார்க்கப்பட்டது.

பின்னர் நான் ஸ்கேன் முடிவுவை தெரிந்துக் கொள்ள மாலையில் அழைத்தேன். ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்! இயேசுவுக்கு ஸ்தோத்திரம்! காயத்தின் ஒரு அடையாளமும் இல்லை. என் அம்மாவின் தலையை ஒரு தேங்காய் விழுந்து தாக்கியும் எந்த ஒரு காயமுமில்லை! தாக்கிய இடத்தில் சிறு வீக்கம் இருந்ததினால் அந்த இரவு மட்டும் ஒரே ஒரு வலி நிவாரணி என் அம்மா எடுக்க வேண்டியிருந்தது. வேறெந்த மருந்துகளும் இல்லை. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அவரை பாதுகாக்குமாறு இயேசுவினத்தில் கேட்டுகொண்டே இருந்ததாக , என் அம்மா பின்னர் பகிர்ந்து கொண்டார்.

தேங்காய் விழுந்த சம்பவத்திற்கு பின்னர் என் அம்மாவிற்கு முன்பு இருந்த கழுத்து தண்டுவட பிரச்சனை (spondylitis) மறைந்துவிட்டது என்று கவனித்தார். ஒருவேளை தேங்காய் தாக்கியதால் இருக்கலாம்! மறைமுகமாக மற்றொரு ஆசீர்வாதம்! தேவனுக்கு ஸ்தோத்திரம்!

சங்கீதம் 91 மிகவும் சக்திவாய்ந்த, நம்முடைய பாதுகாப்புக்காக கர்த்தருடைய வாக்குறுதியாகும். நான் ஒவ்வொரு காலையும் இரவும் சங்கீதம் 91 னை ஜெபிக்கிறேன். சங்கீதம் 91 மூலமாய் தேவனுடைய பாதுகாப்பை பெற்ற பலர் சாட்சிகளை கூறுவார்கள். சங்கீதம் 91றின் சக்தியும் வாக்குறுதியும் எல்லா நாடுகளிலும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள பல மக்களை தொடும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

**<u>சங்கீதம் 91: 9-13</u>**

***“எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக்கொண்டாய்.***

***ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.***

*உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.*

*உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.*

*சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்".*

<u>சங்கீதம் 91: 15-16</u>

*"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.*

*நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்."*

## <u>அமிதேஷின்(Amitesh )கதை – தேவனுடைய ஞானத்தை நம்பிக்கை வைப்பது</u>

நான் எம்.பி.ஏ முடித்துவிட்டேன். பின்பு பெங்களூரில் ஒரு வேலை தேட முடிவு செய்தேன். நான் பெங்களூரை அடைந்தது என் வேலை வேட்டையை தொடங்கினேன். நான் பல நிறுவனங்களுக்கு மனு அனுப்பினேன். பல வாரங்கள், என்னால் முடிந்தவரை முயற்சி செய்தும் எந்த வேலை வாய்ப்பையும் பெற முடியவில்லை.

மனம் குலைந்த நிலையில் விரக்தியோடு இருந்தேன். வீட்டை பிரிந்து வந்ததினால் ஏக்கமாக இருந்தது. நான் என் அம்மாவுடன் பேசினேன். அவரும் என்னை பிரிந்ததினால் ஏக்கமாக இருந்தார். அவர் வேலை வேட்டையில் இருந்து விலகிக்கொண்டு சில நாட்களுக்கு வீட்டிற்கு வருமாறு என்னை கேட்டார். நான் விமான டிக்கெட்டும் பதிவு செய்துவிடேன். நான் என் பொருட்களை மூட்டைகட்டி வீட்டுக்குச் செல்ல தயாராக இருந்தேன்.

அந்த நாட்களில், நான் பெங்களூரில் என் நண்பரின் வீட்டில் தங்கியிருந்தேன். நான் என் நண்பரின் வீட்டிலிருந்து வெளியே போக காலெடுத்து வைக்கும் போது ஒரு நிறுவனத்திலிருந்து தொலைபேசியில் அழைப்பு வந்தது. அவர்கள் என்னை மறு நாள் சந்தித்து பேட்டி காண விரும்பினார்கள். நான் ஒரு சில நாட்களுக்கு வீட்டிற்கு போகிறேன் என்று அவர்களுக்கு விளக்கினேன். நான் திரும்பி வந்த பிறகு அவர்களை சந்திக்க முடியுமா என்று கேட்டேன். அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அடுத்த நாள் நேர்முக பேட்டி வைத்திருக்கிறோம் அதில் தேர்வடைந்தால் உடனடியாக வேலையில் சேர வேண்டும் என கூறிவிட்டார்கள். அடுத்த நாள் அவர்களை சந்திக்க முடியவில்லை என்றால், நான் இந்த வாய்ப்பை இழக்க கூடும் என்று என்னிடம் கூறினார்கள்.

அதனால் நான் வீட்டுக்கு போகவேண்டுமா அல்லது வீட்டு பயணத்தை ரத்து செய்துவிட்டு இந்த வேலை பேட்டியில் கலந்துகொள்ள வேண்டுமா என்று ஒரு முடிவை எடுக்க வேண்டும். இந்த பேட்டி ஒரு அழைப்பு மையத்தில்(call center) வேலை செய்வதற்காக. மற்றும் இரவு நேரமும் வேலை செய்யவேண்டும்.

நான் பல வாரங்களாக வேலைக்காக முயற்சி செய்துவருகிறேன். நான் வேலை செய்து சம்பதிக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். நான் வீட்டுப் பயணத்தை ரத்து செய்தால் என் பெற்றோரை சந்திக்க முடியாது. என் அம்மா என்னை பிரிந்ததில் ஏக்கமாய் இருக்கிறார் என்றும் தெரியும். என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரு புறம் என் பிழைக்கும் வழி, மறுபுறம் நீண்ட காலத்திற்கு பிறகு என் பெற்றோரை சந்திக்கும் வாய்ப்பு. அவர்களும் என்னை சந்திக்கவும் ஆவலாக இருந்தார்கள் அதேபோல் எனக்கு ஒரு நல்ல வேலை கிடைத்து நிலைபெற வேண்டும் என்ற ஆர்வமும் அவர்களுக்கு இருந்தது. நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.

நான் என் மூத்த சகோதரியை அழைத்து அவரிடம் என் நிலைமையை விளக்கினேன். நான் எங்கு இருக்கிறேன் என்று கேட்டார்.

நான் சொந்த ஊருக்கு கிளம்பி என் நண்பரின் வீட்டு வாசல்படியில் நின்று கொண்டிருப்பதாக கூறினேன். நான் ஒரு காலணி காலிலும் ஒரு காலணி ஒரு கையிலும், மற்ற கையில் தொலைபேசில் அவளிடம் பேசி கொண்டிருப்பதாக கூறினேன். நான் உள்ளே செல்வதா அல்லது என் மற்ற காலணியை அணிந்து வெளியே என்று தெரியவில்லை.

என் சகோதரி எனக்கு வேதாகமத்திலிருந்து(பைபிள்) இருந்து சில வாக்குறுதிகளை அளித்தனர். இயேசுவிடம் பிரார்த்தனை செய்ய எனக்கு கற்றுகொடுத்தார்:

**<u>நீதிமொழிகள் 3: 5-6</u>**

***“உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,***

***உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.”***

அவர் ஒரு அமைதியான இடத்தை கண்டுபிடித்து வேத வார்த்தைகளை (நீதிமொழிகள் 3: 5-6 ) பயன்படுத்தி கர்த்தராகிய இயேசுவிடம் பிராத்தனை செய்ய சொன்னார். இயேசுவினிடம் என் நிலைமையை ஒப்பு கொடுத்து வழிகாட்டும்படி அவரை கேட்க சொன்னார். நான் கீழே உட்கார்ந்து என் கண்களை மூடி, அவர் எனக்கு கொடுத்த வேத வசனங்கள பயன்படுத்தி கர்த்தராகிய இயேசுவிடம் ஜெபித்தேன். கர்த்தராகிய இயேசுவிடம் எனக்கு அவரது ஞானத்தில் நம்பிக்கை உண்டு என்று கூறினேன். இயேசுவினிடம் என் நிலைமை ஒப்பு கொடுத்து எனக்கு வழிகாட்ட அவரை வேண்டினேன். ஒரு மென்மையான குரல்"வீட்டிற்கு போ.". என்றது. திடீரென, நான் என்னில் ஒரு சமாதானத்தை உணர்ந்தேன்.

நான் வீட்டுக்கு போக முடிவு செய்தேன். என்னுடைய முடிவு தவறானது, ஒரு வேலை கிடைப்பதுதான் முக்கியம், என்று பலர் நினைக்கலாம். தேவனுடைய போதனைக்கு கீழ்படிந்ததினால் எனக்கு சமாதானம் ஏற்ப்பட்டது என்று எனக்கு தெரியும்.

நான் வீட்டுக்கு சென்று என் பெற்றோர் மற்றும் நண்பர்களுடன் நன்றாக நேரம் செலவிட்டேன்.

மிக விரைவில், எனக்கு மூன்று பல்வேறு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைத்தது. இப்போது பல நிறுவனங்களில் வேலை வாய்ப்பு கிடைத்ததால் எதை தேர்ந்தெடுப்பது என்று தெரியவில்லை! எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அச்சமயம் இந்த வேலை வாய்ப்புகளை விட நல்ல வாய்ப்பு வந்து கொண்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. ஒரு நல்ல அரசு நிறுவனத்தில், நல்ல சம்பளத்தில், ஒரு நிர்வாக நிலையில் இன்னொரு வேலை வாய்ப்பு கிடைத்தது. இதுவே என் முதல் வேலையாக இருக்க எனக்கு வழங்கப்படும் மிகவும் நல்ல சம்பளம் எனக்கு ஆச்சரியத்தை அளித்த்து.

நான் பெங்களூரில் கால் சென்டரில் இரவு நேரமும் வேலை செய்தாலும் கிடைக்கும் சம்பளத்தை விட கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகமாக இருந்தது.

நான் இப்போது இங்கே!!! கர்த்தராகிய இயேசு ஒரு நல்ல வேலை, ஒரு அற்புதமான சம்பளம் மற்றும் நிறுவனத்தில் ஒரு நல்ல நிலையால், என்னை ஆசீர்வதித்தார். கண்ணுக்கினிய ஒரு அழகான இடத்தில் வேலை அமைந்த்து. நான் உண்மையில் அவருக்கு எவ்வளவு நன்றி கூறினாலும் போதாது.

**<u>சங்கீதம் 66: 19-20</u>**

***"மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்.***

***என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக."***

**<u>சுப்ரதா கதை (Subrata's story) - இயேசு என் அடைக்கலம், என் கோட்டை,</u>**

***நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன். "*** (**சங்கீதம் 91: 2**)

நான் சமீபத்தில் என் வீட்டை கட்டி முடித்தேன், கீழ் தளத்தை வாடகைக்கு கொடுக்க விரும்பினேன். வாடகையிலிருந்து வரும் பணம் எனக்கு தேவைப்பட்டது.

என் மகனின் உடல் நல குறைவால், ஒரு ஆண்டுக்கு இரண்டு முறை சிகிச்சைக்கு பெங்களூர் அழைத்து செல்ல வேண்டியிருந்தது. கீழ் தளத்திலுருந்து வரும் வாடகைப் பணம் கை செலவிற்கு உதவியாக இருக்கும். ஆனால் வாடகைக்கு குத்தகைகாரர் யாரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. எனக்கு கவலையாக இருந்தது.

என் மனைவி சமீபத்தில் ஒரு ஐந்து நாட்கள் ஆவிகுரிய கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பி வந்தார். அங்கே அவரும், பிற பங்கேற்பாளர்கள் அனைவரையும் கர்த்தராகிய இயேசு எப்படி தொட்டார் என்ற அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

அவர் மக்கள் எப்படி இயேசுவை துதிக்கிறார்கள், இயேசுவை வழிபடுகிறார்கள் இயேசுவிடம் பிராத்திக்கிறார்கள் என்பத்தை பகிர்ந்து கொண்டாள். நான் ஊக்கமடைந்து, வீட்டு வாடகைக்கு குத்தகைகாரர், கிடைக்க உதவ வேண்டுமென இயேசுவிடம் பிராத்தனை செய்ய முடிவு செய்தேன்.

வேதாகமத்தில் (பைபிளில்) குறிப்பிட்டுள்ள கடவுளின் வாக்குறுதிகளின் சக்தியை பற்றி எனது மைத்துனி என்னுடன் பகிர்ந்து கொண்டு, நாம் நம்பிக்கையோடே எப்படி இயேசுவிடம் பிராத்தனை செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார்.

நான் இயேசுவிடம் முழுமனதோடு ஜெபிக்க தொடங்கினேன். நான் தினமும் சங்கீதம் 91யை கோரி வேண்டினேன். ஒரு சில நாட்களில், என் தேவைகளுக்கு பொருந்தும் வாடகையை கொடுக்க, தயாராக இருந்த ஒரு குத்தகைகாரர் கிடைத்தார். நான் குத்தகைகாரர் நல்லவரா அல்லது நான் மற்றொருவருக்காக காத்திருக்க வேண்டுமா என்று யோசித்து இன்னும் தயங்கினேன்.

அதன் பின்னர் நான் முழு நிலைமையையும் இயேசுவிடம் ஒப்பு கொடுக்க முடிவு செய்தேன். இயேசு நமக்கு எல்லாவற்றையும் வழங்குபவர். அவரிடம் நம்மையும் நம் சூழ்நிலைகளையும் சரணடையும் போது, இயேசு எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். இயேசு எல்லாவற்ரையும் கவனித்துக் கொண்டார்! அவர் மிகவும் உண்மை உள்ளவர். எனக்கு ஒரு நல்ல குத்தகைகாரர் கிடைத்தார். நல்ல வாடகையும் கிடைத்தது. கூடுதல் வருமானத்தை கொண்டு என் மகனின் மருத்துவ செலவுகளை எளிதாக பார்த்து கொள்ள முடியும். என் நிதிப் பிரச்சனை தீர்க்கப்பட்டது. என் மகனின் நோய் கூட குணமாகி கொண்டுவருகிறது. நான் தேவனை துதிக்கிறேன்! அவர் மிகவும் அன்பானவர். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்.

**<u>சங்கீதம் 91: 14-15</u>**

***"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.***

***அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்."***